மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல் போன்ற மிகப் புகழ்பெற்ற மிகப் பெரிய பறவைகள் சரணாலயம் தஞ்சாவூர் மாவட்டத்திலே கோடிக்கரையில் உள்ளது. உலகத்தின் பல்வேறு பாகங்களிலே இருந்து, பல ஆயிரக்கனக்கான மைல்களிலே இருந்து பறவைகள் ஒவ்வொரு காலங்களிலும், ஒவ்வொரு இடங்களுக்கும் வருவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கின்றன. அவைகள் இயற்கையாக வருகின்றனவே தவிர, யாரும் செயற்கையாக அந்தப் பறவைகளை அழைத்து வருவதில்லை.

தூத்துக்குடி சிவன் கோவில் திருப்பணி.

* வினா எண் 457 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, சிவன் கோவில் தெருவில் உள்ள அருள்மிகு சிவன் கோவில் திருப்பணி செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, அருள்மிகு சிவன் கோயிலில் உடனடியாக திருப்பணி செய்ய வேண்டிய திருப்பணி வேலைகள் இல்லையாதலால், தற்போது திருப்பணி செய்யும் திட்டம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது முன்னோர்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொன்னார்கள். ஒவ்வொரு ஊரிலும் மூன்று கோயில்கள், நான்கு கோயில்கள் என்று இருக்கின்றன. இவைகள் மிகவும் பழமையான கோயில்கள். திருப்பணி செய்யப்படாமல் இருக்கின்றன. சில இடங்களில் திருப்பணி வேலை பாதியிலேயே நிற்கிறது. இதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திருப்பணிக்காக இந்த அரசு பதவிக்கு வந்த பிறகு எவ்வளவு ரூபாய் தமிழ்நாடு முழுவதற்கும் ஒதுக்கியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, சிவன் கோயிலைப் பற்றிய கேள்வி இது. தமிழகத்தைப் பற்றிய மொத்த விவரமும் அறிய விரும்புகிறேன். தனி கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் சேகரித்துத் தர வசதியாக இருக்கும்.